**தலைப்பு 427 – கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் அமைச்சு அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

-

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கணக்கீட்டின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தளபாடங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படாததால், ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ரூபா 29,284,746 பெறுமதியை நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உறுதிப்படுத்த முடியவில்லை. | காணி, கட்டிடங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் போன்றன மாத்திரமே அச்சிடப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்படும். மேலும் தாங்கள் குறிப்பிட்டுள்ள ஏனைய சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளிடப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிபிரமாணங்கள் 502(2) இன் தொகுதி 11 என்பவற்றின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரத்துடன் பொருந்தும் வகையில் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | பொலிஸ் திணைக்களம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 24,900,000 தொகையான 03 வாகனங்களின் பெறுமதி | மேற்குறிப்பிட்ட 03 வாகனங்களும் தற்போது இந்த இராஜாங்க அமைச்சின் கீழ் இல்லாததாலும், அந்த வாகனங்களின் பதிவு உரிமை இந்த இராஜாங்க அமைச்சிடம் இல்லாததாலும் குறித்த 03 வாகனங்களையும் இராஜாங்க | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலையான சொத்து பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. நிதியல்லாத சொத்துகள் கூற்றின் இறுதி மீதியில் இந்த பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு கணக்காய்விற்குத் தேவையான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அமைச்சின் நிலையான சொத்துப் பதிவேட்டில் இருந்து நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். | |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் இலத்திரனியல் உபகரணங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. | இலத்திரனியல் உபகரணங்கள் பதிவேடு பேணப்படுகிறது. | அரசாங்க கட்டிடங்களில் உள்ள அனைத்து இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருளிருப்பு புத்தகம் பிரமாணங்களின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,621,628 தொகையான குறுக்கு பதிவுகள் மூலமான செலவுகள் நிதிக்கூற்றுக்களின் முற்பண கணக்கு பொழிப்பில் வழங்கப்பட்டுள்ள போதிலும் அது அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் ரூபா 4,279,180 ஆக இருந்தது, அதன் மூலம் ரூபா 657,552 வேறுபாடு காணப்பட்டது. | குறுக்கு பதிவுகள் மூலம் ஆண்டிற்கான செலவு பதிவுகள் முற்பண கணக்கு பொழிப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் தவறாக வழங்கப்பட்டன. இது ரூபா 4,279,180 ஆக சீர்செய்யப்பட வேண்டும். இது தவறு என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வாறாயினும், இறுதி மீதி சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | திறைசேரி அச்சீட்டு பிரதிகளின் அடிப்படையில் தகவல் சரியாக பதிவுசெய்யப்பட வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்று சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்கு சொந்தமான 06 வாகனங்களின் பதிவு சான்றிதழ்கள் | இந்த இராஜாங்க அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சரின் பதவியணியினரிற்கு உத்தியோகபூர்வ வாகனமாக தற்காலிகமாக | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒதுக்குவதற்காக விவசாய அமைச்சால் PF-7316 டபிள் கெப் வண்டி வழங்கப்பட்டது, மேலும் அதன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி விவசாய அமைச்சிடம் உள்ளது.<br><br>JO - 6958 கார் மற்றும் GD – 2079 லாண்ட்ரோவர் ஜீப்பின் பதிவுச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் இந்த இராஜாங்க அமைச்சிடம் இருக்கவில்லை, மேலும் அதன் பிரதியை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.<br><br>CAG – 8807 மற்றும் KX – 7664 கார்கள் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் நிதிக் குத்தகை முறையின் கீழ் 150 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட வாகனங்கள் என்பதால், பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி நிதி குத்தகை வசதிகளை வழங்கியுள்ள இலங்கை வங்கி பொரளை கிளை மற்றும் நகர அலுவலகத்தின் பாதுகாப்பில் உள்ளது.<br><br>302 – 0610 வாகனப் பதிவு உரிமையானது தொழில்துறை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் பெயரில் உள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் பதிவு உரிமைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான 8 வாகனங்கள் விவசாய அமைச்சிற்கும், 3 வாகனங்கள் வர்த்தக அமைச்சிற்கும், 5 வாகனங்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கும், 3 வாகனங்கள் கடலோர பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கும், 1 வாகனம் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கும், 1 வாகனம் சமூக சேவைகள் அமைச்சுக்கும், 3 வாகனங்கள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கும் | CAU – 3194 / CAH – 1634/ CAF – 4619 / KX – 8612 / KX - 8135 வாகனங்கள் கௌரவ விவசாய அமைச்சர் மற்றும் அவரது பதவியணியினரின் உத்தியோகபூர்வ வாகனங்களாக ஒதுக்குவதற்கு தற்காலிகமாக விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.<br><br>KX – 7037 மற்றும் KO – 5114 வாகனங்கள் விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் விவசாய பிரிவிடமும், நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சிடமும் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.<br><br>PF – 6976 - இந்த வாகனம் தற்காலிகமாக விவசாய அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. KO – 4865 / GF – 9312 / PD – 8931 ஆகியவற்றை வர்த்தக அமைச்சிடம் ஒப்படைக்க தேவையான ஏற்பாடுகள் | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| விடுவிக்கப்பட்டதுடன், அந்த வாகனங்களின் விடுவிப்பின் அடிப்படை மற்றும் அங்கீகாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மேற்கொள்ளப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.<br><br>64 – 3179, 302 – 0610, CAG – 8807, KX – 7664, KA – 6702 வாகனங்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.<br><br>KW – 9992 / KY – 4046 / KX – 8136<br><br>2021.07.08 இல் கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டு புதிய அமைச்சில் உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்துவதற்காக திரு. மோகன் பி டி சில்வாவிற்காக இந்த வாகனங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.<br><br>KO – 0024 - இந்த ஜீப் தற்காலிக அடிப்படையில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>CAA – 0024 - இந்த வாகனம் 2018 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்துவதற்காக சமூக வலுவூட்டல் அமைச்சரால் எடுக்கப்பட்டுள்ளது.<br><br>KY – 7364, GD – 2079 வாகனங்கள் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன் KY – 5290 நெல் சந்தைப்படுத்தல் சபையின் கடமைகளுக்காக 2015.09.28 முதல் கையகப்படுத்தப்பட்டுள்ளது. | |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப கிரய மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட கிரய மதிப்பீட்டை தயாரிக்கும் போது, 07 செலவின வாக்குப்பணங்களின் வேறுபாடு எதிர்மறையான 50 சதவீதத்திலிருந்து நேர்மறையான 481 சதவீதம் வரை மாறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கீடுகளை மாற்றுவதன் மூலம் செலவினங்கள் முகாமை செய்யப்பட்டிருந்தன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். காரணம் குறிப்பிட்ட செலவினங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டிற்கு அப்பால் செலவினங்களைச் செய்ய வேண்டியிருந்தமையால் 2001 செலவினத்திற்காக ரூபா 4,812,746 மேலதிக ஒதுக்கீடுகள் பெறப்பட்டமையும் 2021 ஆம் ஆண்டில் | ஆரம்ப கிரய மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட கிரய மதிப்பீடு என்பன மிகவும் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொற்றுநோய் சூழ்நிலையை எதிர்கொண்டமையும் ஆகும். | |
| (ஆ) | செலவின விடயங்களின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்புக்கள் காணப்பட்ட 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | கொவிட் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, சில செலவின வாக்குப்பணங்களின் கிரயம் மதிப்பிடப்பட்ட தொகையை விட குறைவாக ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தது. | தொடர்புடைய மதிப்பீடுகள் முடிந்தவரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு தொடர்பாக அமைச்சு வாகன பராமரிப்புச் செலவினங்களில் (427-01-02-1301) உள்ள சேமிப்பைக் கருத்தில் கொள்ளாமல் ரூபா 929,084 மேலதிக நிதியேற்பாட்டிற்கு கடப்பாட்டை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த அமைச்சுக்குச் சொந்தமான பெரும்பாலான வாகனங்கள் மிகவும் பழமையான (15 வருடங்களுக்கும் மேலான) வாகனங்கள் என்பதால் அத்தகைய வாகனங்களைப் பராமரிப்பதற்கான கிரயம் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விட அதிகமாக உள்ளது. | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நிதியேற்பாடுகளிற்கு அப்பால் பொறுப்புக்களை தடுப்பதற்கு தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்**

முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் தொடர்பாக பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் இரண்டு ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்து ரூபா 99,450 தொகையை அறவீடு செய்வதற்கு 05 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தாபன விதிக்கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் இறந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 152,745 கடனை 02 ஆண்டுகளுக்கும் மேலாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவையிலிருந்து விலகிய திரு. கே.ஜி.ஆர். ஜெயசாந்த என்பவரின் ரூபா 36,390.00 தொகையான இடர் கடன் தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்காக அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு, சேவையிலிருந்து விலகிய அபிவிருத்தி உதவியாளர் கே.யூ.ரீ. பெரேராவின் ரூபா 62,519.49 | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் மற்றும் கடனைஅறவீடு செய்வதற்கு தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | இடர்கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவிக்கப்பட்டள்ள போதிலும் இதுவரை உரிய பதில் அளிக்கப்படவில்லை. | |
| (ஆ) | 1 மற்றும் 2 ஆண்டுகளுக்கு இடையே இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 200,700 தொகை காணப்பட்ட போதிலும், அது நிதிப்பிரமாணம் 485(4) இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டும், மேலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. பி.டி.சீ.பி. குணரத்னவின் இடர் கடன் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு இரத்தினபுரி பிராந்திய கல்வி அலுவலகத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 485(4) இன் பிரகாரம் செயற்படுதல் மற்றும் கடன் அறவீட்டிற்கு தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துதல். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | 2021 ஆம் ஆண்டில், கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகங்களிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 இல் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் அகற்றப்பட்ட ஏனைய சொத்துக்கள் பற்றிய தகவல்களை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020.10.02 ஆம் திகதிய 5/2020 02 (அ) ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | இயங்கும் நிலையில் இல்லாத வாகனங்கள் 2020.12.31 இற்கு முன்னர் கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் இயங்கும் நிலையில் இல்லாத 251-0747, JR-2899, மற்றும் 65-6120 ஆகிய 03 வாகனங்கள் | கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய வாகனங்களை இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட கணக்கெடுப்பு சபைக்கு 03 வாகனங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. | சுற்றறிக்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைச்சு வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. | | |

(இ) பெறுகை வழிகாட்டல்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2.14.1 இன் 3 ஆம் பந்தி | வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பதிவேட்டை அமைச்சு பேணியிருக்கவில்லை. மேலும் பெரும்பாலான பெறுகை கடை முறையைப் பயன்படுத்தி செய்யப்பட்டது. | வருடாந்தம் விவசாய அமைச்சின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பதிவேட்டில் இருந்து உரிய தகவல்கள் பெறப்பட்டு தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாய அமைச்சின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியலை அமைச்சின் பெறுகை குழுவிடம் சமர்ப்பித்து, எதிர்காலத்தில் அங்கீகாரத்தை பெறுவோம் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | 2.7.4 ஆம் பந்தி | பெரிய ஒப்பந்தங்கள் மற்றும் சிறிய ஒப்பந்தங்களுக்கான பெறுகைக் குழுவில் மாற்று உறுப்பினரை அமைச்சு நியமித்திருக்கவில்லை. | சிறு ஒப்பந்தங்களுக்கான பெறுகைக் குழு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எதிர்காலத்தில் பெறுகை குழுவிற்கு மாற்று உறுப்பினர் நியமிக்கப்படுவார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | 4.2.1 ஆம் பந்தி | பெறுகை வழிகாட்டல்களின் மாதிரியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமானது, ஒவ்வொரு பெறுகை பணியின் எதிர்பார்க்கப்படும் தொடக்கத் திகதியையும், எதிர்பார்க்கப்படும் பூர்த்தி செய்தல் திகதியையும் | இணங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிலிருந்து பெறுகை கால எல்லையானது தொடங்கும் மற்றும் முடிவடையும் திகதியைக் குறிப்பிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிட வேண்டும், ஆனால் அது ”தேவைக்கேற்ப” என்று எழுதப்பட்டுள்ளது. | | |
| (iv) | 8.9.3 இன் (ஆ) பந்தி | ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் வேலை ஒப்பந்தங்கள் தொடர்பாக உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட வேண்டும். ஒன்லைன் கூட்டங்களை நடாத்துவதற்காக ஒலி முகாமைத்துவ அலகு ஒன்றை நிறுவுதல், பணிநிலையங்களை கொள்வனவு செய்தல், 10 மேசைக் கணனிகள், 05 மடிக்கணனிகள் மற்றும் 03 புகைப்பட பிரதிசெய்தல் இயந்திரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் 05 மடிக்கணனிகளை கொள்வனவு செய்தல் ஆகிய 04 பெறுகை நிகழ்வுகள் தொடர்பாக ரூபா 5,416,330 தொகை செலவிடப்பட்டதுடன் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | ஒன்லைன் கூட்டங்களை நடாத்துவதற்காக ஒலி முகாமைத்துவ அலகு ஒன்றை நிறுவுவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறதுடன் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநருடன் 2 வருட சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பணிநிலையத்தை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை, ஆனால் 2 வருட உத்தரவாத காலம் பெறப்பட்டுள்ளது. 10 மேசைக் கணனிகள், 05 மடிக்கணனிகள் மற்றும் 03 புகைப்பட பிரதிசெய்தல் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2014 பெப்ரவரி 14 அம் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நடவடிக்கைகளுக்கான நிதித் தேவைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | இணங்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு முதல், நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிதித் தேவைத் திட்டத்தை உள்ளடக்க முடியவில்லை. | பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கான இலக்கு காலப்பகுதி 2021 சனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 வரை ஆகும். திரவ பால் நுகர்வுகளை ஊக்குவித்து பிரபலப்படுத்துதல், கால்நடை வளர்ப்பு பண்ணைகளை நிறுவுதல், பன்றி தொழிலை உருவாக்குதல், சிறிய மற்றும் நடுத்தர கோழிப்பண்ணைகளை உருவாக்குதல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணை முகாமைத்துவம் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் ஆகிய 05 நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தவதற்காக முன்மொழியப்பட்ட திகதிகள் மற்றும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறித்துரைத்த திகதிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. அந்த நேரத்தில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோயின் தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் ஒவ்வொரு செயற்திட்டமும் செயற்படுத்தப்படும் மற்றும் பூர்த்தி செய்யப்படும் சரியான திகதிகளைக் குறிப்பிடுவது கடினம் என்பதால், ஆண்டின் போது இது செயற்படுத்தப்படும் என்பதால் இது 2021.01.01 முதல் 2021.12.31 வரை உள்ளிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். | செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, அமைச்சின் முக்கிய பணிகளுக்கு உரிய கவனம் செலுத்தித் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள 06 நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடங்கிய ஒவ்வொரு செயற்திட்டத்தையும் நடாத்துவதற்கும் செயலாற்றலை சோதிப்பதற்கும் ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அளவுகோல்கள் (முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்) இனங்காணப்படவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் முகாமைத்துவம், செயவாற்றலை கண்காணிப்பதற்கான அளவுகோல்கள் (KPI) மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி ஆகியன விரிவாக வழங்கப்படுகின்றன. | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதி மற்றும் பெறுகை அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர பால் பண்ணைகளை மகாமை செய்வதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நோய்த்தடுப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் செயற்திட்டத்திற்கு ரூபா 27 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அந்த செயற்திட்டத்தின் கீழ் எவ்வளவு உபகரணங்கள் பெறப்படும் மற்றும் நோய் தடுப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது பற்றிய தகவல்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது.<br>இந்த ரூபா 27 மில்லியனில் ரூபா 25 மில்லியன் கால்நடைத் துறையில் தரவுகளை சேகரிப்பதற்கான மென்பொருள் முறைமையை உருவாக்குவதற்கு ஒதுக்கப்பட்ட போதிலும் தற்போதுள்ள சூழ்நிலையில் அதைச் செய்ய முடியவில்லை. மேலும், மீதமுள்ள ரூபா 2.00 மில்லியன் நோய்த்தடுப்பு மற்றும் தொடர்புடைய சாதனங்களுக்காக ஒதுக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, அமைச்சின் முக்கிய பணிகளுக்கு உரிய கவனம் செலுத்தித் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | திரவ பால் நுகர்வை ஊக்குவித்து பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களுக்கு 40 விற்பனை இயந்திரங்களை வழங்கும் செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டு ரூபா 03 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக மில்கோ கம்பனி தெரிவுசெய்யப்பட்டு, விற்பனை இயந்திரங்களை வழங்குவதற்கு பதிலாக, 75 பால் குளிரூட்டிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே, செயல்நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரிக்கும் போது சரியான தேவைகளைக் கண்டறிந்து செயற்திட்டங்களை உள்ளடக்க தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் சூழ்நிலையில் விற்பனை இயந்திரங்களின் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களை திறப்பதில் உள்ள சிக்கல் காரணமாக, செயலாளரின் அங்கீகாரத்துடன் பால் குளிரூட்டி இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த மாற்றம் 2021.12.06 இல் செய்யப்பட்டதால், இது செயலநடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. | -மேற்படி- |
| (ஊ) | ரூபா 450 மில்லியனில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணைகளின் முகாமைத்துவத்தின் ஊடாக பால் உற்பத்தியை அதிகரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 275.24 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. 12 செயற்திட்டங்களுக்காக ஏற்பட்ட கிரய விபரங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் பல செயற்பாடுகளைக் கொண்டிருந்தது. எனினும், 2021.12.31 இல் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த போதிலும், நிதி விவகாரங்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், சில நடவடிக்கைகளுக்கு உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக வங்கிகளால் டொலர்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் அந்த நடவடிக்கைகள் தொடர்பான நிதியேற்பாடுகள் அமைச்சின் பொது வைப்பு கணக்குக்கு மாற்றப்பட்டன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் இறுதியில் மொத்த செலவினம் ரூபா 275.24 ஆக உள்ளது என்பதை குறிப்பிடுகிறேன். | |
| (எ) | மில்கோ நிறுவனத்திற்கு 100,000 கால்நடைகளை இனங்காணுதல் மற்றும் இனப்பெருக்க உபகரணங்களை வழங்குதல் ஆகிய 02 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு முறையே ரூபா 13 மில்லியன் மற்றும் ரூபா 5.1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், அச் செயற்திட்டங்களுக்கான பெறுகை நடவடிக்கைகள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. | மில்கோ நிறுவனத்திற்கு 100,000 மாடுகளை இனங்காணவும் மற்றும் இனப்பெருக்க உபகரணங்களை வழங்கவும் முறையே ரூபா 8 மில்லியன் மற்றும் ரூபா 5.1 மில்லியன் என ரூபா 13.1 மில்லியன் கூட்டுமொத்த தொகை ஒதுக்கப்பட்டது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் இந்த 02 பணிகளுக்கான பெறுகை மற்றும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களமானது காது குறிச்சொற்களின் (ear tags) பெறுகை மற்றும் இனப்பெருக்க உபகரணங்களின் பெறுகைக்கான முன்னணி நிறுவனமாகும். 2021 ஆம் ஆண்டில், அவர்கள் விலங்கு இனப்பெருக்க உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கேள்வி கோரியிருந்ததுடன் கேள்வி தீர்மானத்தின் அடிப்படையில் மீள்கட்டளையிடல் முறையின் அடிப்படையில் அதே விலைகளில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | -மேற்படி- |

### 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2 மில்லியன் மதிப்பீட்டு கிரயத்தில் 2021 இல் ஆரம்பிக்கப்பட வேண்டிய பூந்தோட்டம் பிராந்திய கால்நடை பண்ணையின் எதிர்பார்க்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் சூழ்நிலையாலும், கட்டிட மூலப்பொருட்களின் அதிக விலையாலும், ஒப்பந்ததாரர் உரிய நேரத்தில் பணிகளைத் தொடங்காததால், பூந்தோட்டம் பிராந்திய கால்நடைப் பண்ணையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தை 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த முடியவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளை அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவிருந்த பேதுருதுடுவ கால்நடை வைத்திய அலுவலகத்தின் நிர்மாண செயற்திட்டம் அந்த வருடத்தில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தி புதிய செயற்திட்டங்களைத் தொடங்குவதற்குவதற்கான நிதி அமைச்சின் சுற்றறிக்கை காரணமாக 2021 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தைச் அமுல்ப்படுத்த முடியவில்லை. | -மேற்படி- |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விலங்கு இனப்பெருக்க பண்ணைகள் தாபன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 20 செயலமர்வுகள்/ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலாற்றல் சோதனைகளை நடாத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் 02 செயற்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்காக முறையே ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 1 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் அதன் முன்னேற்றம் குறித்த எந்த தகவலும் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, திட்டமிட்டவாறு தொடர்புடைய செயலமர்வுகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது கடினமாக இருந்தது என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். | உரிய தகவல்களை சரியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சேதங்களும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணங்கள் 106 மற்றும் 113 இன் கீழ் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்றின் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 128,204 மற்றும் 5 ஆண்டுகளுக்கு குறைவான ரூபா 68,200 என ரூபா 196,404 கூட்டுமொத்த தொகையான சேதங்கள் | ரூபா 68,200 பெறுமதி ரூபா 52,000 ஆக திருத்தப்பட வேண்டியதுடன் மேலும் KQ - 6416 என்ற வாகனம் தொடர்பாக தவறுதலாக அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிக்கப்பட வேண்டிய அல்லது விட்டுவிட வேண்டிய ரூபா 1200 தொகைக்கு பதிலாக, மொத்த நட்ட பெறுமதி ரூபா 17400 கணிப்பிடப்பட வேண்டும். இதன் விளைவாக ரூபா 68,200 தொகை பெறப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள தரப்பினரிடமிருந்து நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள தரப்பினரிடமிருந்து அறவிடப்படவில்லை அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படவில்லை.

அதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட வேண்டிய அல்லது விட்டுவிட வேண்டிய சேதங்கள் மற்றும் நட்டங்களின் பெறுமதி ரூபா 180,204.78 ஆகும்.

(i) KA - 6702 - விபத்து தொடர்பான நட்டம் ரூபா 128,204.78 ஆகும், அதில் ரூபா 52,312.88 தொகை சாரதிக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகையிலிருந்து அறவிடப்பட்டு வருகிறது. மீதமுள்ள நட்டத் தொகையை பதிவழிப்பதற்கு சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளதால், உரிய தொகையை பொதுப்பணித்துறை வருங்கால வைப்பு நிதியில் இருந்து வசூலித்த பின், மீதமுள்ள தொகை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பு செய்யப்படும்.

(ii) KQ - 6416 - M.R. 104(4) விபத்து தொடர்பாக, இறுதி விசாரணையின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொடர்புடைய நட்டம் அறவிடப்படும் அல்லது விட்டுவிடப்படும்.

(iii) KT – 8467 - காரைப் பழுதுபார்ப்பதற்கான காப்புறுதி கோரிக்கையின் கீழ் காப்புறுதி கம்பனி செலுத்திய தொகை தொடர்பான விபரங்கள் குறித்த கம்பனியிடம் இருந்து கேட்கப்பட்டதுடன் பதிலுக்குப் பின்னர் விபத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது பதிவழிக்க வேண்டிய அல்லது தவிர்க்கப்பட வேண்டிய M.R. 104 (4) இன் இறுதி விசாரணையின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய நட்டம் கோரப்பட்டது.

## 3.5 முகாமைத்துவக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட PG-1773, CAB-4184, PF-7316, PH-0474, PF-7639, PF-8209 ஆகிய இலக்கங்களைக் கொண்ட 06 வாகனங்களின் உரிமைத்துவத்தை ஆண்டின் இறுதி வரையிலும் அமைச்சு கையேற்றிருக்கவில்லை. | PG-1773 - வாகனத்தின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. CAB-4184, PF-7316, PH-0474, PF-7639 - தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டதால், வாகனங்களின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | வாகனத்தின் உரிமைத்துவத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு அமைச்சின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 205 மேலதிக பொருட்களும் மற்றும் 366 பற்றாக்குறை பொருட்களும் உண்மையான மீதிக்கும் பதிவேட்டின் பிரகாரமான மீதிக்கும் இடையில் அவதானிக்கப்பட்டன. | எமது அமைச்சு விவசாய அமைச்சுக்கு சொந்தமான கட்டிடத்தில் பேணப்படுகிறது. 36 மின்விசிறிகள் மற்றும் 59 மின்விளக்குகள் என குறிப்பிடப்பட்டுள்ள மின் உபகரணங்கள் எமது அமைச்சுக்கு சொந்தமானவை அல்லாததுடன் அவை விவசாய அமைச்சுக்கு சொந்தமானதாகும். ஆனால் இலத்திரனியல் உபகரணப் பதிவேட்டில் இந்தப் பொருட்களை உள்ளடக்கியுள்ளோம். இதனால், அந்த பொருட்கள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்புப் பதிவேடு சரியாகவும், நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட வேண்டும். |
| (இ) | அமைச்சின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் 193 உருப்படிகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் அவை பிரதான பொருளிருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | 04 உருப்படிகளின் அளவு என்பது 2022 ஆம் ஆண்டில் அந்தப் பிரிவுகளால் பெறப்பட்ட பொருட்களாகும். மேலும், பொருள் மெய்மையாய்வு சபையால் வழங்கப்பட்ட அறிக்கையைகருத்தில் கொண்ட பின்னர் இது தொடர்பான 44 பொருட்களை பொருளிருப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன | பொருளிருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காத பொருட்களை உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். | |
| (ஈ) | அமைச்சில் உள்ள பொருட்கள் குறியீடு இடப்படாததால் ஒரே உருப்படி வெவ்வேறு பெயர்களில் பதிவு செய்யப்படலாம் என்பதால் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்விற்கு சிக்கலாக இருந்தது. | 2022 ஆம் ஆண்டு முதல் CIGAS முறைமையின் பிரகாரம் பொருட்களின் குறியீடு இடுதல் முறை தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலையான சொத்துக்கள் உருப்படி குறியீடு இடலிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 30 வகையான நிலையான சொத்துக்களுக்கான பெறுமதிகள் பதிவு செய்யப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து ஒரு புதிய ஆவணத்தைத் தயாரித்த பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கும் CIGAS முறைமையின் சொத்து மீதிக்கும் இடையே சில வேறுபாடுகள் இருக்கும். அதற்குக் காரணம் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வுகளின் பிரகாரம் அகற்றப்பட்ட அல்லது மாற்றப்பட்ட பொருட்கள், CIGAS முறைமையிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. தற்போது தகவல் சீர்செய்யப்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். | நிலையான சொத்துக்களின் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறான 08 நிலையான சொத்துகளின் மீதிகள் நிலையான சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல், இந்த அமைச்சின் கீழ் ஒரு புதிய நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகப் பேணப்படும் என்பதுடன் 2021.01.01 இல் அதில் சேர்ப்பதற்காக சில நிலையான சொத்துக்களின் முன்னைய பௌதீக மீதிகளை இனங்காண்பது கடினமாக உள்ளது. அதன் பிரகாரம் தற்போது இது சரி செய்யப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | நிலையான சொத்துக்கள் அனைத்தும் நிலையான சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 594 ஆக இருந்த போதிலும், உண்மையான பதவியணியினர் 559 ஆக காணப்பட்டதுடன் 37 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. | இணங்கப்பட்டது. பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியில் உத்தியோகத்தர் ஒருவர் இருப்பதால், தற்போது வெற்றிடம் காணப்படவில்லை. III/II தரங்களின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் பிரதி/ உதவி பணிப்பாளர்/ கால்நடை உத்தியோகத்தர் ஆகிய 08 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் 03 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. எதிர்காலத்தில், இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சேவை அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர், அந்த பதவிநிலைகளுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட உள்ளனர். உதவி செயலாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையின் அடிப்படையில் அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கும், பணிநீக்கத்தை உருவாக்காத வகையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 2/2018 அம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்பு 02 மாதிரியின் பிரரகாரம் ஒவ்வொரு பதவியணி உறுப்பினரிற்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வாய்ப்பை வழங்குவதன் மூலம் மனித வளத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. மீளாய்வாண்டில் ரூபா 160,500 செலவிடப்பட்டு 05 செயலமர்வுகள்/ கருத்தரங்குகள் 20 பதவியணி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே நடாத்தப்பட்டன. | 02/2018 அம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி 02 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |